


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்

எர்ணாபுரம் ஊராட்சி

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், எர்ணாபுரம் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் -88/1B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:800 (அ) 1"=66'0"

இணையதள விண்ணப்ப எண் : 4JSRRFUE நாள் : 21.06.2024

குறிப்பு :

1. மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	5.065 ஏக்கர் (அ) 20497.09 சதுர மீட்டர்
2. மனைப்பிரிவின் எல்லை		
3. உத்தேச சாலை		
4. நிலையிலுள்ள சாலை		
5. மொத்த மனைகள்	:	115
6. ஒதுக்கிய மனைகள்	:	110 (EWS மனைகள் உட்பட)
7. EWS மனைகள் பரப்பு	:	18-24, 67-74, 81-89, 97-104
8. ஒதுக்கப்பட வேண்டிய 10% பூங்காவிற்கான பரப்பு		32 மனைகள் - 1526.32 சதுர மீட்டர் (10.16%) மனைப்பிரிவின் மொத்தபரப்பு - சாலைகளின் (மொத்தப்பரப்பு X 10/100) = (20497.09-5463.41X 10/100) = 1502.48 சதுர மீட்டர்
9. ஒதுக்கப்பட வேண்டிய மின்பகிர்மானம் மனைகளின் பரப்பு	:	75.14 சதுர மீட்டர் (0.50%)
10. ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு மனைகளின் பரப்பு	:	75.14 சதுர மீட்டர் (0.50%)

பொது ஒதுக்கீடுகள் :

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவை

1. உத்தேச மனைப்பிரிவு சாலை மூலம் முடக்கு உட்பட : 5460.41 சதுர மீட்டர்
2. பொது உபயோகப் பரப்பளவு = 84.71 சதுர மீட்டர் (0.54%)
3. மின் பகிர்மான இடப் பரப்பளவு = 112.51 சதுர மீட்டர் (0.75%)
4. பூங்காவின் பரப்பு (புங்கை-புங்கை) = 1524.02 சதுர மீட்டர் (10.14%)

மூலை முடக்கு : 16மீ அகல சாலை வரை 1.50mX1.50m

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.

2. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04.03.2019 -ன் படி OSR பரப்பிற்கு 10% இடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குனர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வனையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்தாரரின் மேல் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொறுத்தமான அமைப்பு அல்ல.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை மாற்றமும், விடுதலினிறி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அளவிலான நிரந்து தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லத்தக்கதல்ல.

8. உத்தேச மனைப்பிரிவின் வடே நிறுவனைகள் அமைமுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

9. உத்தேச மனைப்பிரிவின் வடே POWER LINE, HT LINE, LT LINE, AND TELEPHONE LINE ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு மாற்றிய பின்னரே முறைப்படுத்தப்படல் வேண்டும்.

10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.

11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

12. அரசாணை எண்.18,16-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04.12.2019 (ம) 31.01.2020-ன் படி விதிகள் அனைத்தும் பொருந்தும்.

13. குறைந்த வருவாய் பிரிவினருக்கான EWS மனைகள் 18-24, 67-74, 81-89, 97-104 வரையிலான மனைகளை மனை உட்பிரிவு / மனை ஒருங்கிணைப்பு / மனை உபயோக மாற்றம் செய்தல் கூடாது. மேலும் 9.0மீ (ம) 7.20மீ அகல சாலையில் அமையும் EWS மனைகளுக்கு கூடுதல் வரம்பு 1.0மீ பொருந்தும்.

14. உத்தரவு ஆணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளை தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

SWP / DTCP / NAMAKKAL/ LAYOUT No. : 219 / 2024

தே.புவனேஸ்வரி
அளவர் / உதவி வரைவாளர்

கு.சுரேந்திரன்
வரைவாளர் நிலை-III

மு.தேன்மொழி
மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்

Signature valid
Signature valid